20.08.2025



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.136/2008**

**பி.வா.சா. 2–கமலநாதன், த/பெ. சிவன்**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்று சொன்னால் சரிதான். வாதி பெரியம்மாளை எனக்கு தெரியும். பிரதிவாதிகள் இருவரையும் எனக்கு தெரியும். வாதி என்ன பரிகாரத்திற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை விவரம் தெரியுமா என்றால் தெரியும். வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேன். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேன். 1ம் பிரதிவாதி மகேந்திரன் பூர்வீக ஊர் முசிறி பக்கத்தில் உள்ள ராயப்பட்டி ஆகும். 1ம் பிரதிவாதி மகேந்திரனுக்கு நல்லவன்னிப்பட்டி பூர்வீகமாக ஊர் கிடையாது என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதி மகேந்திரன் LIC முகவராக இருந்துள்ளார் என்றால் சரிதான்.

/உண்மை நகல்/
ஒம்/–திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.